8

# உதவிக்காரர் நியமன ஆராதனை: "என்னை ஒரு ஊழியக்காரனாக்குங்கள்"

*நான் ஒரு உதவிக்காரர் நியமன ஆராதனையை நடத்தினபோது மூப்பர்களுக்கான நியமன ஆராதனையைப் போலவே ஏற்கனவே சொல்லப்பட்டுள்ள ஒழுங்கு முறையில் நடத்தினேன். வாசிக்கப்பட்ட வசனங்கள். சொல்லப்பட்ட குறிப்புரைகள் உதவிக்காரர்களின் பணியைப் பொருந்தப்பண்ணின. தொடர்ந்து வரும் பக்கங்களிலுள்ள உதவிக்காரர் நியமன ஒழுங்கு ஆராதனைப் படிவத்தில் சொல்லப்பட்டுள்ளவை, சில அதே வடிவத்தில் அமைந்திருந்தாலும், அநேக வழிகளில் அது வித்தியாசப் பட்டது. முதலாவதாக, ஆராதனை ஒழுங்கு ஒரு தனித்தாளில் அச்சிடப்பட்டு கலந்துகொண்ட யாவருக்கும் வினியோகிக்கப் பட்டது. இதன் மூலம் என்ன நிகழ்ச்சி நடக்கிறது என்பதை வரிசைப்படி சபையார் பின் தொடரவும் மத்தேயு 20:25-28ஐ எல்லோரும் ஒரே மொழிபெயர்ப்பு வசனங்களை ஒன்று சேர்ந்து வாசிக்கவும் ஏதுவாக்கியது. இதில் நமது பாட்டுப் புத்தகத்தில் இல்லாத "ஊழியனுக்கான பாடலின்" வசனங்களும் இடம் பெற்றிருந்தது. இரண்டாவது வித்தியாசம் என்னவெனில் அந்தக் கருத்தை ஒட்டிய ஒரு சிறிய பிரசங்கத்தைச் செய்யவும் நேரம் ஒதுக்கப்பட்டது.*

## குறிப்புகள்

*மூப்பர்களில்லாமல் (அதிகார ரீதியாக) ஒரு சபை உதவிக்காரரை கொண்டிருக்க முடியாது என்பதை பெரும்பாலானோர் ஏற்றுக் கொள்கின்றனர். உதவிக்காரர்களை நியமிக்கிற வேளையில் மூப்பர்கள் இருப்பார்கள் என்ற யூகத்தில் அந்த சபையில் மூப்பர்களே முதன்மையாக நின்று ஒழுங்கு முறைப்படிவத்தில் கண்டுள்ள ஆராதனையை நடத்த வேண்டும்.*

*ஆராதனையில், அறிமுக குறிப்புரைகளை நான் வழங்கினேன், பிரசங்கம் செய்தேன், அழைப்புக் கொடுத்தேன், மற்றும் பொதுவாக ஆராதனை மிகவும் மிருதுவாக "நீங்கள் என்னவாக இருக்க விரும்புகிறீர்கள்" என்ற சுருக்கச் செய்தி இந்தப் புத்தகத்திலேயே முழுமையாக கொடுக்கப்பட்டுள்ளது.*

*நீங்கள் "ஊழியக்காரன் பாடலை" பயன்படுத்தலாம். பாடல் (ராகம்) உங்களுக்குத் தெரியாவிட்டால், அதிலுள்ள வார்த்தைகளை நீங்கள் சத்தமாக வாசிக்கலாம் அல்லது உள்ளூர் சபையார்கள் ஒன்றாக சேர்ந்து வாசிக்கலாம். உணர்ச்சிமிகு நேரம் நகர்ந்து கொண்டிருக்கிறது.*

*உதவிக்காரர்கள் அறிமுகப் படுத்தப்படும்போது சபையில் அவர்களுடைய*

கடமை என்ன என்பதை (அவர்களுடைய பொறுப்புகள் ஒவ்வொருக்கும் என்ன என்பதை) குறிப்பிடுவது சிறப்பான கருத்தாக இருக்கும். மூப்பர்கள் இதை சிறப்பாக நியமன ஆராதனைக்கு முன்பே ஒழுங்குபடுத்தி ஒவ்வொரு உதவிக்காரனுக்கும் மூப்பர்கள் பணிக்கும்படி மனதில் கொண்டுள்ள வேலைகளை நிறைவேற்ற மனதுள்ளவர்களாகவும் திறமையுள்ளவர்களாகவும் இருக்கிறார்களா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளவேண்டும். தாங்கள் என்ன செய்ய வேண்டும் என்று ஒரு வழியும் தெரியாமலிருக்கிற உதவிக்காரர்களைக் காட்டிலும் நேர்மறையாய் செயல்படுத்த வேண்டிய உள்ளூர் சபைக்கு கெடுதியானது ஒன்றும் இருக்காது. ஒவ்வொரு உதவிக்காரனுடைய உத்தியோகமும் என்னவாக இருக்கும் என்று உள்ளூர் சபையாருக்குத் தெளிவுபடுத்துவதில் இன்னொரு பயனும் இருக்கும். அவர்களுக்கு ஒரு கேள்வி இருக்கும் போது, உடனடியாக மூப்பரிடம் எதற்குகெடுத்தாலும் செல்வதற்கு பதிலாக முதலில் ஒரு உதவிக்காரனிடம் செல்ல ஊக்கப்படுத்தும். உள்ளூர் சபை சிறியதாயிருக்குமேயாகில், ஒவ்வொரு நியமன உதவிக்காரருக்கும் வாய்மொழியாக செய்ய வேண்டியவைகளைச் சொல்லலாம். அநேக உதவிக்காரர்கள் நியமிக்கப் பட்டிருப்பார்களேயாகில் பொறுப்புக்களும் ஞாபகத்தில் வைக்க ஏராளமாக இருக்கக் கூடும், எனவே ஒவ்வொரு உதவிக்காரருடைய பெயர்களையும் அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட பணிகளையும் அச்சிட்டு அந்த வரிசைபட்டியலை ஆராதனை முறைமையுடன் விநியோகித்து விடலாம்.

எங்கள் மூப்பர்களில் ஒருவர் "மூப்பர்களிடமிருந்து பணியை ஒப்புக் கொடுத்தலை" வழங்கினார். மற்றும் "உதவிக்காரர்களிடமிருந்து மறுமொழி"யைக் கொடுக்க ஒருவர் தெர்ந்தெடுத்து நியமிக்கப்பட்டிருந்தார்.

இந்த ஆராதனைக்கு என்னுடைய அழைப்பு ரோமர் 6:3-6, 17, 18 ஐ அடிப்படையாகக் கொண்டிருந்தது. நாம் ஞானஸ்நானம் பண்ணப்படும்போது தேவனுடைய ஊழியக்காரர்களாகிறோம் என்று இந்த வசனப் பகுதி போதிக்கிறது. ஞானஸ்நானம் பண்ணப்படாத அனைவருக்கும் அவர்கள் தேவனுக்கும் மனுஷருக்கும் ஊழியர்களாக இருக்கும்படி முழுக்கப்பட உற்சாகப்படுத்தினேன்.

என்னுடைய பிரசங்கத்துக்கு எட்டு நிமிடம் ஆனது. மூப்பர்களின் (உதவிக்காரருக்கான) கொடுக்கப்பட்ட கடமைகளை வாசிக்க எட்டு நிமிடம் ஆயிற்று. துவக்கத்திலிருந்து முடிவுரை ஒரு மணி நேரமும் பதினைந்து நிமிடங்களாயின.[1]

---

குறிப்பு

[1]பாரம்பரிய, "ஊழியக்காரன் பாடல்," விசுவாச ஸ்தோத்திரப் பாடல்கள் தொகுத்து பதிப்பு செய்தவர் ஆல்டன் ஹோவார்ட் (மேற்கு மோன்ரே, லாஸ் ஏஞ்சலஸ்:, ஹோவார்ட் வெளியீட்டுக் குழுமம், 1994).